1973 மார்ச் 9]

தங்களது திட்டவட்டமான கருத்துக்களையும் சிறந்த அனுபவத்தையும் எங்களுக்கு அளிக்குமாறு உங்களனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு III

(146-ம் பக்கத்தில் உள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண் 39—எழுதுபொருள்-அச்சுத்துறை.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் அவர்களது பரிவுரையின் பேரில் "கோரிக்கை 39—எழுதுபொருள்-அச்சுத்துறை" என்பதன்கீழ் ரூ. 4,87,04,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன். எழுதுபொருள்-அச்சுத்துறை செயல்படுவதை விளக்கும் ஆய்வுரை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் நாட்டத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

2. ஆயினும், இத்துறை செயல்படுவதை மேம்படுத்துவதற்காக அரசு மேற்கொண்ட அல்லது மேற்கொள்ளக் கருதியுள்ள முக்கியமான நடவடிக்கைகளைக் குறித்து மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள நான் விரும்புகிறேன்.

மூன்று வட்டார அச்சகங்களையும், கிளை அச்சகங்களையும் கொண்டுள்ள இந்த அச்சகத்தில் ஏறத்தாழ 4,000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களில், 2,800 தொழிலாளர்கள் வள்ளலார் நகரிலுள்ள முக்கிய அச்சகத்திலேயே பணிபுரிந்து வருகின்றனர். தமிழ் நாடு அரசு அச்சகம் இந்நாட்டிலே உள்ள மிகப் பெரிய அச்சகங்களில் ஒன்றாகும். எழுதுபொருள்-அச்சுத்துறையை "வணிக முறையில்" நடத்தும் கொள்கையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இது குறித்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

3. அரசு அச்சகத்தை மேம்படுத்துவதற்காக அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகளில், சென்னை, சூளையில் ஆனைக்கார் எஸ்டேட்டில் கிளை அச்சகம் ஒன்றை அமைப்பது பற்றி

எடுத்துள்ள நடவடிக்கை முக்கியமானதாகும். இதற்காகக் கட்டடம் ஒன்று குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. கிளை அச்சகம் இங்கு விரைவில் செயல்படத் தொடங்கும். இந்த அச்சகத்தின் மூலம் சுமார் 800 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

4. அரசின் நிதி நிலையைப் பொறுத்து, எல்லா மாவட்டத் தலைமை இடங்களிலும் வட்டார அச்சகங்களை அமைக்க அரசு ஆவலாயுள்ளது. முதற்கண், மதுரையில் அச்சகம் ஒன்றைத் திறப்பதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதற்காகத் தேவைப்படும் 3 ஏக்கர் பரப்பளவுள்ள மனை ஒன்றை அரசு தன் வயப்படுத்தியுள்ளது. மதுரை வட்டார அச்சகத்தின் கட்டடப் பணிகளைத் தொடங்குவதற்கு அரசு நிர்வாக அனுமதி வழங்கி யுள்ளது.

தமிழில் மாதம் இருமுறையாகவும் ஆங்கிலத்தில் மாதந் தோறும் வெளியிடப்படும் "தமிழரசு" சென்னை வள்ளலார் நகரிலுள்ள அரசு அச்சகத்திலும், அண்ணசாலையிலுள்ள கிளை அச்சகத்திலும் அச்சடிக்கப்பட்டு வந்தது. இந்தப் பத்திரிகையை உரிய காலத்தில் வெளியிடவும், கவர்ச்சிகரமான முறையில் அதனைக் கொண்டு வரவும் அரசு "தமிழரசு அச்சகம்" எனப்படும் தனி அச்சகம் ஒன்றை அரசாங்க மாளிகையில் அமைத்துள்ளது. இவ்வச்சகம் விரைவிலேயே செயல்படத் தொடங்கும். இப் பத்திரிகையில் பல வண்ணப் படங்களுடன் தமிழில் சுமார் 40,000 பிரதிகளும், ஆங்கிலத்தில் 3,000 பிரதிகளும், செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநரால் வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழரசு அச்சகத்தின் பொறுப்பும், நிர்வாகமும் இப்போது சென்னை செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநரிடம் உள்ளது.

5. எழுதுபொருள்-அச்சுத்துறை பற்றி அடங்கல் முறையில் ஆய்வதற்கென, சீரமைப்புக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இக்குழு இதுவரை, நிர்வாக அமைப்பு, அதிகாரப் பிரிவினை, அச்சுப் பொருள்களின் தேவைப்பட்டியல்கள் தயாரிக்கும் நடைமுறையிலும் அச்சுப் பட்டியல்கள் முதலியவற்றை நிறைவேற்றும் நடைமுறையிலும் மேம்பாடுகள் செய்தல் போன்ற 89 பரிவுரைகளைக் கொண்ட மூன்று இடைக்கால அறிக்கைகளை

1973 மார்ச் 9]

அளித்துள்ளது. இந்த 89 பரிவுரைகளில், 70 பரிவுரைகளின் மேல் அரசு இறுதி ஆணைகள் பிறப்பித்துள்ளது. அரசு அச்சகத்தில் பற்பல வேலைகளுக்கான தரங்களை அறிவியல் முறையில் ஆய்வு செய்வதற்காகவும், உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் கிடைப்பதற்கான பெரும் வாய்ப்புகளை அளிக்கும் ஊக்கத் திட்டம் ஒன்றை வகுப்பதற்காகவும் சென்னை உற்பத்தித் திறன் குழுவின் பணியைப் பயன் படுத்திக் கொள்ளப்பட்டது.

தொழிலாளர் நலன் பற்றிய தொழிலாளர் கல்வித் திட்டத்தின் கீழ், தொழிலாளர்-ஆசிரியர் இருவரால் இதுவரை 200 தொழிலாளர் களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

6. தொழிலாளர்கள் வசதியுடன் வேலை செய்வதற்கேற்ற மன நிறைவான வேலை நிலைமைகளை உருவாக்கித் தருவதன் அவசியத்தை அரசு முற்றிலும் உணர்ந்துள்ளது. இன்றியமையாத வசதிகள் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. கூடுதலாகப் பல வசதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. வரியச்சு, தனியச்சு, யந்திர (லினோ, மோனோ மெஷின்) துறைகளில் தொழிற்சாலை வகை மின்சார விளக்குகள் போடப் பட்டுள்ளதால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் இடையூறுகள் குறைக்கப்பட்டன.

7. கடந்த ஆண்டில் மிக முக்கியமான அச்சுப் பணிகளைப் பெருமளவில் அரசு அச்சகம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அச்சகப் பணியாளர்களும் தொழிலாளர்களும் அளித்த ஒத்துழைப்புடனும் அவர்கள் காட்டிய பொறுப்புணர்வையும், ஒழுங்குணர்வையும் கொண்டும், அந்த அச்சுப் பணிகள் குறிப் பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்கப்பட்டன என்பதைக் குறிப் பிடுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாண்டில் இத்துறை அச்சகப் பணியை வெளியே தனியார் அச்சகங்களுக்கு ஒப்படைக்கின்ற சத விதம் 4.71 சத விதத்திலிருந்து 2.82 சத விதமாகக் குறைக்கப்பட்டுள்ளதோடு, அதன் உற்பத்தியையும் 95.29 சத விதத்திலிருந்து 97.18 சத விதத்துக்கு உயர்த்தியுள்ளது. இவ்வாண்டில் சட்டமன்றப் பேரவை, மேலவை நடவடிக்கைகள் அச்சிடப் பெறுவதற்கு சிறப்பான கவனம் செலுத்தப்பட்டு, சட்ட மன்றத்தில் நடைபெற்ற விவாதங்களின் பிரதிகள் சட்ட

மன்றத்தின் அடுத்த கூட்டத் தொடர் தொடங்குவதற்கு முன்னமேயே உரிய காலத்தில் கொண்டுவரப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவ்வப்போது அனுப்பி வைக்கப்பட்டன என்பதை ஈண்டுக் குறிப்பிடலாம்.

அச்சகத் துறைப் பணியாளர்களும், தொழிலாளர்களும் தொடர்ந்து அளித்து வரும் ஒத்துழைப்பைப் பெற்று தமிழ் நாடு அரசு அச்சகம் இந் நாட்டில் மிகச் சிறந்த அச்சகப் பணிமனைகளில் ஒன்றாக விளங்கக்கூடும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

இந்த அவை, இத்தீர்மானத்தை ஏற்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS